# கப்பலூர் டோல்கேட்டில் நள்ளிரவில் சிறைபிடிக்கப்பட்ட அரசுப்பேருந்து..!

## நடுவழியில் தவித்த பயணிகளால் பரபரப்பு



**திருமங்கலம், ஜன. 05-**

மதுரை மாவட்டம், திருமங்கலம் அருகே நள்ளிரவில் கப்பலூர் டோல்கேட்டில் பாஸ்டேகில் பணம் இல்லாததால் அரசுப் பேருந்து சிறைபிடிக்கப்பட்டதை தொடர்ந்து நடுவழியில் இறக்கி விட்ட பயணிகள் குழந்தை குட்டிகளுடன் தவித்தனர்.

திருமங்கலம் அருகே நான்கு வழிச்சாலையில் செயல்பட்டு வரும் கப்பலூர் டோல்கேட் விதிகளை மீறி நகராட்சி எல்லைக்கு மிகவும் அருகில் அமைக்கப்பட்டு உள்ளதால் அதனை வேறு இடத்திற்கு மாற்றிட வலியுறுத்தி திருமங்கலம் பகுதி மக்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

இந்நிலையில் கப்பலூர் டோல்கேட் வழியாக நாள் தோறும் சென்று வரும் நூற்றுக்கணக்கான அரசுப் பேருந்துகள் பாஸ்டேக் பிரச்சனை காரணமாக பல்வேறு சிக்கல்களை சந்தித்து வருகின்றன. குறிப்பாக அரசுப் பேருந்துகளில் உள்ள பாஸ்டேக்கில் இருப்பு குறைந்து விடுவதால் டோல்கேட் ஊழியர்கள் அவற்றை சிறை பிடித்து பணம் கட்டுமாறு கட்டாயப்படுத்து கின்றனர். இதனால் அரசுப்பேருந்து பணியாளர்களுக்கும் டோல்கேட் ஊழியர்களுக்கும் இடையிலான பிரச்சனைகள் தொடர்கதையாகி வருகிறது.

அவ்வப்போது அரசுப் பேருந்துகளை காத்திருக்க வைப்பது, லைன் மாற்றி அனுப்பி விடுவது என டோல்கேட் ஊழியர்கள் அரசுப் பேருந்துகளை காலதாமதம் செய்து வருகின்றனர். இதனிடையே பாஸ்டேக் பிரச்சனையால் தடுத்து நிறுத்தப்படும் அரசுப் பேருந்துகளில் பயணம் மேற்கொண்டிடும் பயணிகள் பெரும் அவதிக்கு ஆளாகின்றனர்.

இதனிடையே நேற்று முன்தினம் நள்ளிரவில் கப்பலூர் டோல்கேட்டிற்கு வந்த திருமங்கலம் பணிமனை அரசுப் பேருந்தில் பாஸ்பேக் பண இருப்பு குறைந்து போனதால் பேருந்தை தடுத்து நிறுத்தி டோல்கேட் ஊழியர்கள் சிறை பிடித்தனர். நள்ளிரவு நேரத்தில் பேருந்து நிறுத்தப்பட்டதால் அதில் பயணித்த 20க்கும் மேற்பட்ட பயணிகள் நடுவழியில் கீழிறக்கப்பட்டு குழந்தை குட்டிகளுடன் பரிதவித்தனர். பின்னர் அவர்கள் மாற்று பேருந்து மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இது போன்ற பிரச்சனைகள் தொடர்ந்து வருவதால் கப்பலூர் டோல்கேட் நிர்வாகமும், அரசு போக்குவரத்துக் கழக நிர்வாகமும் பேச்சு வார்த்தை நடத்தி நடுவழியில் பயணிகள் தவித்திடும் நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்திட வேண்டும் என்பதே பயணிகள் மற்றும் பொதுமக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

# நிலக்கோட்டையில் வீரமங்கை வேலு நாச்சியார் பிறந்த தின விழா



**வத்தலக்குண்டு, ஜன. 05-**

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை பிரமலைக்கள்ளர் கூட்டமைப்பு அலுவலகத்தில் இந்தியாவின் முதல் சுதந்திரப் போராளி வீரமங்கை சிவகங்கை சீமை ராணி வேலு நாச்சியாரின் 296 வது பிறந்த தினத்தை முன்னிட்டு திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து பிரமலைக்கள்ளர் கூட்டமைப்பு மாநில பொருளாளர் இளங்கோ தலைமையில் மரியாதை செலுத்தி இனிப்புகள் வழங்கி கொண்டாடினார்கள்.

இந்நிகழ்ச்சியில் டி.என்.டி. ஒற்றை சாதி சான்று வழங்கிட தமிழக அரசுக்கு கோரிக்கை வைத்து உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். இந்நிகழ்ச்சியில் செங்கல்பட்டு மாவட்ட அமைப்பு தலைவர் பாலசுப்பிரமணியன், ஆத்தூர் ஒன்றிய தலைவர் சிவக்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.


# கட்டங்குடியில் வேளாண்மை கல்லூரி மாணவர்கள் விவசாயிகளுடன் பயிற்சி



**அருப்புக்கோட்டை, ஜன. 05-**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கி வரும் வ.உ.சிதம்பரனார் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த நான்காம் ஆண்டு இளங்கலை வேளாண்மை அறிவியல் மாணவர்கள், தங்களின் கிராமப்புற வேளாண்மைப் பயிற்சியை பதிமூன்றாம் நாளில் கிராம பங்களிப்பு கட்டங்குடி கிராமத்தின் தினசரி செயல்பாடுகள், வளங்கள், சமூக வரைபடம், திசை வரைபடம், பிரச்சனை மரம் போன்றவற்றை விவசாயிகள் மற்றும் கிராம மக்களுக்கு விளக்கம் அளித்தனர்.கல்லூரி முதல்வர் முனைவர் தேரடிமணி, தலைவர் முனைவர் காளிராஜன் மற்றும் குழுவின் ஒருங்கிணைப்பாளரான பேராசிரியர் முனைவர் ரமேஷ் ஆகியோரின் தலைமையின் கிராம பொதுமக்கள் மற்றும் விவசாயிகளுடன் கலந்துரையாடினர்.

# செந்துறையில் வீட்டிற்குள் புகுந்த சாரைப்பாம்பு மீட்பு



**நத்தம், ஜன. 05-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே செந்துறை- குரும்பபட்டியை சேர்ந்தவர் அடைக்கலராஜ்(42). விவசாயி.இவரது வீட்டில் நேற்று சாரைப்பாம்பு ஒன்று ஊர்ந்து சென்று கொண்டிருந்தது.

இதை பார்த்து பதறிய அடைக்கலராஜ் நத்தம் தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் தெரிவித்தார்.அதன் பேரில் சம்பவ இடத்திற்கு சென்ற நத்தம் தீயணைப்பு நிலைய உதவி அலுவலர் அம்சராஜன் உள்ளிட்ட வீரர்கள் வீட்டில் ஊர்ந்து சென்று கொண்டிருந்த 5 அடி நீளமுள்ள சாரைப்பாம்பை கருவி மூலம் லாவகமாக பிடித்தனர். பின்னர் அந்த பாம்பு நத்தம் வனத்துறையினரிடம் ஒப்படைக்கபட்டு வனப்பகுதிக்குள் விடப்பட்டது

# தெலுங்கு திகில் திரைப்படமான நாட் ஆல் மூவீஸ் ஆர் தி சேம்: டூயல் லயன்ஸ்கேட் பிளே தளத்தில் வெளியாகவுள்ளது

**சென்னை, ஜன 05-**

நாட் ஆல் மூவீஸ் ஆர் தி சேம், டூயல் திரைப்படத்தில் அதிர்ஷடமாக ஆரம்பமாகும் கதை ஒருகட்டத்தில் உறங்கவிடாத திரில்லராக மாறுகிறது. ஒரு ஒதுக்குப்புறமான ஏரிக்கரை கிராமத்தின் அமைதியான சூழலில் நிகழும் இந்தப் படம், ஒரு மீனவனின் வாழ்க்கையை கூறுகிறது. தற்செயலாக அவன் கண்டுபிடிக்கும் ஒரு விஷயம் இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்வுகளின் திகிலான சம்பவங்களாக தொடர்ந்து, அந்த பகுதி மக்களை ஒரு களேபரத்தில் தள்ளுகிறது. சுரேஷ் சாகிராஜு இயக்கிய இந்த பரபரப்பான தெலுங்கு திகில் த்ரில்லர் திரைப்படமானது எப்படி இயற்கையும் விதியும் ஒன்றோடு ஒன்று மோதி, யாரும் கற்பனை கூட செய்து பார்க்க முடியாத சக்திகளை கட்டவிழித்து விட்டு பயம் காட்டுகிறது என்பதை, ஒரு வழக்கமான கிராமப்புற வாழ்க்கையின் வழியே தத்ரூபமாகக் காட்டுகிறது. வல்லப் தேஜா கதாநாயகனாக நடித்துள்ள இந்த திரைப்படத்தில், ரோஷினி அரவிந் தக்ஷன், ரகு வர்தன் கல்லம், குஷி பிள்ளலா, சௌந்தர்யா ராம் தாஸ் மற்றும் ரெக்சன் ராஜ் ஆகியோர் நடித்துள்ளனர். இந்த டூயல் திரைப்படத்தில் அச்சுறுத்தும் பேய் காட்சிகள், சப்தங்கள் கூறும் கதை, மற்றும் அதிர்ச்சியூட்டும் திருப்பங்கள் என திக்திக் தருணங்கள் இத்திரைப்படத்தில் நிறைந்துள்ளன.

இந்த கிராமிய தெலுங்கு திரைப்படம் உங்கள் இருக்கையின் விளிம்பில் அமர்ந்து நகராமல் ரசிக்க வைப்பதை உறுதி செய்கிறது. குறைந்த பட்ஜெட் திரில்லர் கதைகளை புதிய பரிணாமத்தில் வழங்குகிறது; அதே நேரத்தில் ஸ்மார்ட்டான, விறுவிறுப்பான திகில் பட ரசிகர்கள் அவசியம் பார்க்க வேண்டிய படமாகவும் அமைந்துள்ளது. தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி மற்றும் கன்னடம் ஆகிய மொழிகளில் வெளியாகும் இந்த படம் ஜனவரி 9 முதல் லயன்ஸ்கேட் பிளேயில் பிரத்தியேகமாக ஒளிபரப்பாகும். இப்படம் குறித்து இயக்குனர் சுரேஷ் சகிராஜூ கூறுகையில், டூயல் திரைப்படம் அரிதான ஒன்றை வழங்குகிறது: ஆழமான உணர்வுடன் கூடிய மேம்பட்ட கருத்தியலை முன்வைக்கிறது. இது ஜோம்பிஸ் அல்லது பேரலல் யுனிவர்ஸ் பற்றியது மட்டுமல்ல - இது ஒன்றோடொன்றுக்கு உள்ள தொடர்பு, பொறுப்பு மற்றும் உயிர் வாழ்வதற்கான விருப்பத்தை பற்றியது. இதன் ஜானர் ஒரு கலவையானது, ஒரு பாலமாக மாறி, வெவ்வேறு இரசனைகளைக் கொண்ட நேயர்களை ஒரு உணர்வுபூர்வமான ஒருங்கிணைந்த அனுபவத்திற்கு வரவேற்கிறது என்று கூறினார்.

# துணை முதல்வர் உதயநிதி பிறந்தநாள்: மேலூரில் மாட்டுவண்டி பந்தயம்



**மேலூர், ஜன. 05-**

மேலூரில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு மதன்ராஜ் நினைவாக மாபெரும் மாட்டு வண்டி எல்கை பந்தயம் மேலூர் தெற்குப்பட்டி திருவாதவூர் சாலையில் நடைபெற்றது.

வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி அவர்களின் ஆலோசனைப்படி மாட்டு வண்டி பந்தயத்தை மேலூர் தொகுதி பொறுப்பாளர் வ.து.ந. ஆனந்த், மேலூர் நகர் மன்ற தலைவர் முகமது யாசின் ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தனர். முதலில் பெரிய மாட்டு வண்டியில் 8 ஜோடிகள் கலந்து கொண்டன. புதுப்பட்டி சிவபாலன் புதூர் வேலு கிருஷ்ணன் முதல் பரிசு 40 ஆயிரம், கடம்பூர் கருணாகர ராஜா இரண்டாம் பரிசு 30,000ம், வேலங்குளம் கண்ணன் மூன்றாம் பரிசு 20,000ம், நரசிங்கம்பட்டி முத்துராமலிங்கம் நான்காம் பரிசு 10,000 -ம் பெற்றனர். சிறிய மாட்டு வண்டி போட்டியில் 21 ஜோடிகள் கலந்து கொண்டன. மேலவளவு பன்னீர் செல்வம் கொட்டகுடி அருண் முதல் பரிசு 30,000ம், கொடிமங்கலம் திருப்பதி தெற்குபட்டி மதன்ராஜ் இரண்டாம் பரிசு 20,000 ம், மேலூர் சிக்கி பாய்ஸ், பரவை சோனைமுத்து மூன்றாம் பரிசு 10,000ம், கொட்டகுடி ரோகித் வர்ஷா நான்காம் பரிசு 5000-ம் பெற்றனர். ரோட்டின் இருபுறமும் பொதுமக்கள், மாட்டு வண்டி பந்தய ரசிகர்கள் ஆகியோர் கண்டு ரசித்தனர்.

மாட்டு வண்டி பந்தய போட்டியை மேலூர் நகர் இளைஞரணி துணை அமைப்பாளரும், 25 வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் எம்.மனோகரன், 25 வது வார்டு செயலாளர் சுமங்கலி குமார், தெற்குபட்டி திமுக நிர்வாகிகள், பொதுமக்கள், இளைஞர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

# ஒட்டன்சத்திரத்தில் சோலார் விழிப்புணர்வு கருத்தரங்கம்



**திண்டுக்கல், ஜன. 04-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் சென்னை சிட்டிசன் கன்ஸ்யூமர் அண்ட் சிவிக் ஆக்சன் குரூப் மற்றும் திண்டுக்கல் மாவட்ட நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பு அசோசியேசன் சார்பில் சோலார் விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது.

கருத்தரங்கில் திண்டுக்கல் மாவட்ட நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பு அசோசியேசன் தலைவர் சுரேஷ்குமார் வரவேற்புரையாற்றினார். மின் வாரிய உதவி பொறியாளர் செந்தில்குமார் சோலார் அமைப்பதற்கு மின் சாரவாரியத்தின் ஒத்துழைப்பு குறித்து பேசினார். சென்னை சிட்டிசன் கன்ஸ்யூமர் அண்ட் சிவிக் ஆக்சன் குரூப் மூத்த ஆராய்ச்சியாளர் ஜி.என்.பரத்ராம் கலந்து கொண்டு வருங்கால மின் தேவைக்கான மேற்கூரை சோலார் அமைப்பது பற்றியும், நோக்கங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து விளக்கவுரை யாற்றினார். சோலார் இன்ஜினியர்கள் பொன்ராம், ராமச்சந்திரன் ஆகியோர் சோலார் அமைப்பதின் முக்கியத்துவம், போர்வெல்களில் சோலார் பயன்பாடு குறித்து பேசினார்கள். வர்த்தகர் சங்க செயல் தலைவர் வஞ்சிமுத்து, செயலாளர் டதனிகாசலம், பொருளாளர் முகமது மீரான், செய்தி தொடர்பாளர் பழனிக்குமார், ரகுமான்சேட் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர் களாக கலந்து கொண்டனர்.

ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா உதவி மேலாளர் சரவணகுமார், இந்தியன் வங்கி முதுநிலை மேலாளர் ராஜேஷ்சர்மா, கனரா வங்கி முதுநிலை மேலாளர் ஸ்ரீமதி ஆகியோர் கலந்து கொண்டு மேற்கூரை சோலார் அமைப்பதற்கான வங்கி கடன் பற்றி விளக்கவுரை ஆற்றினார்கள். திண்டுக்கல் மாவட்ட நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பு அசோசியேசன் செயலாளர் எம்.வி.பாலசுப்பிரமணி யம் நன்றி கூறினார்.

இந்நிகழ்ச்சியில் ஒட்டன்சத்திரம் பகுதியை சேர்ந்த வர்த்தக சங்க நிர்வாகிகள், எலக்ட்ரிக்கல் அண்ட் எலக்ட்ரானிக்ஸ் கடை உரிமையாளர்கள் நுகர்வோர் சங்க உறுப்பினர்கள், அரசு ஓய்வபடம். திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் சோலார் விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது.

## திருப்பரங்குன்றத்தில்

# எஸ்.ஐ.ஆர். வரைவு வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த முகாம்: அ.தி.மு.க. நிர்வாகிகள் ஆய்வு



**திருப்பரங்குன்றம், ஜன 05-**

தமிழகம் முழுவதும் நடைபெற்ற எஸ்.ஐ.ஆர். தீவிர வாக்காளர் சிறப்பு முகாம் அடிப்படையில் கடந்த மாதம் வெளியான வரைவு வாக்காளர் பட்டியலில் திருத்தம், புதிய வாக்காளர் சேர்க்கை, விடுபட்ட வாக்காளர்களை கண்டறிந்து மீண்டும் இணைத்தல் முகவரி மாற்றம் போன்றவை தற்போது தமிழக முழுவதும் சிறப்பு முகாம் மூலம் நடைபெற்று வருகிறது.

அதன் அடிப்படையில் திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதியில் நடைபெற்று வரும் சிறப்பு முகாமினை அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியின் ஆணைக்கிணங்க மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட செயலாளரும், திருப்பரங்குன்றம் சட்டமன்ற உறுப்பினருமான வி.வி. ராஜன் செல்லப்பாவின் வழிகாட்டுதலின்படி திருப்பரங்குன்றம் கிழக்கு பகுதி செயலாளர் மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞர் அணி செயலாளர் வழக்கறிஞர் எம். ரமேஷ் தலைமையில் ஒன்றிய செயலாளர் நிலையூர் முருகன் மற்றும் திருப்பரங்குன்றம் கிழக்கு பகுதி கழகத் துணைச் செயலாளரும், மாவட்ட இலக்கிய அணி செயலாளருமான கவிஞர் ப. மோகன்தாஸ், மாவட்ட வழக்கறிஞர் பிரிவு செயலாளர் வழக்கறிஞர் ஆர்.சேதுராமன் ஆகியோர் முன்னிலையில் அண்ணா திராவிட முன்னேற்ற கழக மதுரை புறநகர் கிழக்கு மாவட்டம் திருப்பரங்குன்றம் கிழக்கு பகுதி கழகத்திற்கு உட்பட்ட அனைத்து வாக்குச்சாவடிகளையும் வட்டக் கழகச் செயலாளர்கள் நாகரத்தினம். தவுடன். நாட்டாமை முத்துக்குமார் ஆகியோருடன் நேரில் சென்று நிர்வாகிகள் ஆய்வு செய்தனர்.

ஆய்வின் போது வாக்குச்சாவடி முகவர்களுக்கும், பிஎல்ஏ 2, மற்றும் பூத் தலைவர்கள் ஆகியோருக்கு பல்வேறு வழிகாட்டுதல் நெறிமுறைகளை வழக்கறிஞர் எம்.ரமேஷ் எடுத்துக் கூறி இளம் வாக்காளர்களை புதிய வாக்கு பதிவு செய்ய உரிய உதவிகளை செய்யவும் விடுபட்ட வாக்காளர்களை கண்டறிந்து அவர்களது இல்லங்களுக்கு சென்று அவர்களை மீண்டும் வாக்காளர் பட்டியலில் இணைக்கவும் உரிய 2நடவடிக்கைகளை மேற்கொள்ள கேட்டுக் கொண்டார். சிறப்பு முகாமில் முகவர்கள் கருப்பு, பாலு, ஆனந்த், ராஜேந்திரன், பாண்டி, ராஜா, சௌந்தரம், செல்வக்குமார், வெங்கடேஸ்வரலு உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# சென்னை தி நகர் மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் ஷோரூமில் பிரத்யேக பிரைடல் நகைகளின் கண்காட்சி மற்றும் விற்பனை துவக்கம்

**சென்னை, ஜன 05-**

இந்த கண்காட்சி மற்றும் விற்பனை ஜனவரி 3-ம் தேதி துவங்கப்பட்டு ஜனவரி 11 ம் தேதி வரை நடைபெற உள்ளது. சிறப்பு சலுகையாக தங்கம், வைரம், ஜெம்ஸ்டோன் மற்றும் அன்கட் நகைகளுக்கு சேதாரத்தில் 30% வரை தள்ளுபடி மற்றும் வைரத்தின் மதிப்பில் 30% வரை தள்ளுபடி வழங்கப்படுகிறது. இந்த சலுகை ஜனவரி 18-ம் தேதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இதன் ஆரம்ப விழாவான பிரெய்ட்ஸ் ஆப் இந்தியா ராம்ப்வாக் நிகழ்ச்சி சென்னை தி நகர் ஷோரூமில் ஜனவரி 2-ம் தேதி நடைபெற்றது. மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் விற்பனையகத்தில் கலைநயமிக்க அணிகலன்கள் கிடைப்பது சிறப்பம்சமாகும். அணிந்தாலே ஜொலிக்கும் வைர நகைகளான மைன் பிரம்மாண்டமான வடிவமைப்புகளை கொண்டுள்ள வெட்டாத வைரத்தால் செய்யப்பட்டஎரா மிகவும் பொக்கிஷமாக கருதப்படும் விலை உயர்ந்த கற்களால் செய்யப்பட்ட நகைகளின் தொகுப்பான எத்தினிக் நமது கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் பாரம்பரிய இந்திய நகை வடிவைப்புகளில் உருவான டிவைன் ஆகியவை இந்த கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன.

மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் தற்போது 14 நாடுகளில் 426 சில்லறை விற்பனை நிலையங்களுடன் உலகில் மிகப்பெரிய நகை விற்பனை நிறுவனமாக உருவெடுத்துள்ளது. அனைத்து நகைகளும் வெளிப்படையான விலை, நிகர எடை, கற்களின் எடை, சேதாரம், கற்களுக்கான விலை, அதன் நிகர எடை ஆகியவற்றை தெளிவாக குறிப்பிடும் பட்டியலுடன் வைக்கப்பட்டுள்ளன. இதனால் வாடிக்கையாளர்கள் ஒவ்வொரு நகையின் தயாரிப்பு குறித்தும், அதன் விலையையும் எளிதாக புரிந்து கொண்டு வாங்குவதற்கு திட்டமிடலாம். வாடிக்கையாளர்கள் வாங்கும் அனைத்து நகைகளுக்கும் ஆயுள் முழுவதும் இலவச பராமரிப்பு, அனைத்து நகைகளையும் எப்போது வேண்டுமானாலும் மாற்றி பெற்றுக்கொள்ளும் உத்திரவாதம் உள்ளிட்ட வாக்குறுதிகளை நமது மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் நிறுவனம் வழங்குகிறது. இவை தவிர மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் நிறுவனத்தின் வெற்றிகரமான வணிகத்திற்கு அதன் சமூகபொறுப்பும் முக்கிய காரணமாக உள்ளது. தனது லாபத்தில் குறிப்பிட்ட சதவீதத்தை சுகாதாரம், கல்வி, வீட்டுவசதி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மகளிரை அதிகாரமயமாக்குதல் என பல்வேறு சமூக பொறுப்பு திட்டங்களுக்கு செலவு செய்கிறது.

# பரமக்குடியில் ஸ்ரீ ராமகிருஷ்ண திருமூவர் ஜெயந்தி விழா

**பரமக்குடி, ஜன. 05-**

பக்தி பெருகும்போது ஒருவன் எங்குத் திரும்பிப் பார்த்தாலும் தன் வழிபாட்டுத் தெய்வத்தையே காண்பான்'' என்ற பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் பொன்மொழியை மையப்படுத்தி, பரமக்குடியில் திருமூவர் ஜெயந்தி விழா மிக விமர்சையாக நடைபெற்றது.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர், அவரது ஆன்மீகத் துணைவியார் அன்னை சாரதா தேவி மற்றும் அவரது முதன்மை சீடரான சுவாமி விவேகானந்தர் ஆகிய மூவரும் 'ஸ்ரீ ராமகிருஷ்ண திருமூவர்' என்று போற்றப்படுகின்றனர். நவீன காலத்தின் ஆன்மீக விழிப்புணர்விற்கும், மனிதநேயத்திற்கும் வழிகாட்டியாகத் திகழும் இவர்களின் ஜெயந்தி விழாவைப் பரமக்குடி ஸ்ரீ ராமகிருஷ்ணா ஞானவழிபாட்டு மன்றத்தினர் சிறப்பாக ஒருங்கிணைத்தனர்.

பருத்தியூர் ஸ்ரீ ராமலிங்க சுவாமி கோவில் வளாகத்தில் நடைபெற்ற இந்த ஆன்மீக விழாவில், திருவண்ணாமலை ரமண சாதனா குடிலைச் சேர்ந்த சுவாமி மாத்ரு சேவானந்தர் வழங்கிய சிறப்பு இன்னிசை பஜனை பக்தர்களைப் பக்தி பரவசத்தில் ஆழ்த்தியது.



மதுரை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த ஸ்ரீமத் சுவாமி அர்கபிரபானந்தர் தலைமை தாங்கி ஆற்றிய உரையில், ''கடவுளை நாம் ஒருவரோடு ஒருவர் பேசுவது போன்று நேரில் காணவும் உரையாடவும் முடியும்'' என்று விளக்கினார். மேலும், கடவுளை முற்றிலும் தெரிந்துகொள்ள யாராலும் முடியாது என்றும், ஆறு தரிசனங்களும் கூட அவரை விளக்கத் திணறுகின்றன என்றும் பகவான் ராமகிருஷ்ணரின் ஆழமான ஞானத்தை எடுத்துரைத்தார்.

நிகழ்வில் முதுகலை ஆசிரியர் தா.கு. ஜெயபிரகாஷ் மகிழ்வுரை ஆற்றினார். அன்னப்பிரசாதம், ஆன்மீகக் கேள்வி-பதில் எனத் தொடர்ந்த இவ்விழா, மகா தீபாராதனையுடன் நிறைவுற்றது. இதில் பரமக்குடி மற்றும் சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த திரளான பொதுமக்கள் கலந்து கொண்டு இறையருள் பெற்றனர்.

